அந்தப் பகுதியில் கான்கிரீட் தளம் அமைப்பதற்கு, மாண்புமிகு உறுப்பினர் கோரியிருக்கின்றார்கள். அவர்கள் அதனை எழுத்துப்பூர்வமாகக் கொடுப்பார்களேயானால், அந்தப் பணி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ.கு.சீ. அன்பழகன்.

திரு. ஆ.கு.சீ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழனுடைய பொற்கால ஆட்சிக்கு இணையாக, ஏரிக் குளங்கள், கால்வாய்கள், தூர்எடுத்தும், கரைகளைப் பலப்படுத்தியும், மழைநீர் சேகரிப்புத் திட்டங்களைப் போல பல நடவடிக்கைகளை எடுத்து தமிழகத்தில் நிலத்தடி நீரைப் பாதுகாத்து வரும், தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, அதுபோல புதியதாக ஏரிக் கால்வாய்கள், ஏரி, குளம், குட்டைகள் அமைக்க ஏதேனும் திட்டம் உள்ளனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *351*, திரு. லா. சந்தானம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

351—

நியாய விலைக் கடை கட்டடம்

***3059—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், குறவருடி ஊராட்சி, வின்னக்குடி பகுதிக்கு நிரந்தர நியாய விலைக் கடை கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், குறவருடி பஞ்சாயத்து, வின்னக்குடி பகுதியிலுள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசுத் திட்டங்களில் தற்சமயம் வழிவகை செய்யப்படவில்லை என்கின்ற பதிலைச் சொல்லி அமர்கின்றேன்.

2005 ஏப்ரல் 13]

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இந்த நியாய விலைக் கடை என்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது. ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேலாக இருக்கின்ற இடம். தற்சமயம் இல்லையென்றாலும் வருகின்ற காலத்திலேயாவது பரிசீலனை செய்து அதற்கு ஒரு நியாய விலைக் கடை அமைத்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், குறவருடி பஞ்சாயத்து, வின்னக்குடி நியாய விலைக் கடை, வாலாந்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 490 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்தக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான முன்மொழிவு மதுரை மண்டல இணைப் பதிவாளரால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி நெறிமுறைகளின்படி ஒதுக்க வழிவகை இல்லையெனவும், தற்சமயம் ஊராட்சி நிதி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதி ஆகியவற்றில் போதிய நிதி வசதியில்லாததால், மேற்படி நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித் தர வழிவகையில்லையெனவும், பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், மேற்படி நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், மதுரை மாவட்ட வளர்ச்சி முகமை, திட்ட அலுவலர் தெரிவித்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இதுவரை நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யாத நிலையில், குறவருடி பஞ்சாயத்து, வின்னக்குடி பகுதிக்கு நிரந்தர நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித் தர வழிவகை ஏதுமில்லையென்றும் எதிர்காலத்தில் நிதியாதாரங்கள் பெருகும்போது அது குறித்து ஆய்வு செய்யப்படும் என்ற பதிலைச் சொல்லி அமர்கின்றேன்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நியாய விலைக் கடை என்பது அனைத்து மக்களும் பயன்பெறக்கூடிய ஒரு கடையாக அமைந்திருக்கிறது. எனவே, இதனை சட்டமன்ற உறுப்பினர்களின் நிதியிலிருந்து கட்டிக்கொள்ளலாம் என்று பல்வேறு மாவட்டங்களிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இதற்குரிய பரிந்துரையைச் செய்தாலும், அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதிலே

இடமில்லையென்று தெரிவித்ததை அமைச்சர் அவர்களே, இங்கே குறிப்பிட்டார்கள். வருகின்ற காலத்திலாவது, அதனுடைய முக்கிய நிலையை அறிந்து, அந்தந்த மாவட்டங்களிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த நியாய விலைக் கடைகளைக் கட்டுவதற்கு உரிய நிதியை ஒதுக்கினால், அதற்கு அனுமதி வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு சிந்திக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விடுபட்ட கேள்வி, வினா எண் 350, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

350—

கால்வாய் இணைப்பு

***71907—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, வைகைப் பிரிவிலிருந்து வரும் நிலையூர் கால்வாயை முல்லைப் பெரியார் பாசனத்துடன் ஒருபோக சாகுபடிக்கு பதிவுக் கால்வாயாக இணைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு உண்டான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ்.எம். சீனிவேல்: அம்மாவின் திசை நோக்கி வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் தொகுதிக்கு உட்பட்ட நிலையூர் சேனல் கால்வாய், சுமார் 9 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலங்களாக உள்ள விவசாய நிலங்களுக்குப் பாசன வசதி